**தலைப்பு 165 – தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 165 – தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சுக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 397.20 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 337.35 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 59.85 மில்லியன் எனப்படும் 15.06 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 76.99 | 46.62 | 30.37 | 39.44 |
| மூலதனம் | 320.21 | 290.73 | 29.48 | 9.20 |
| மொத்தம் | **397.20** | **337.35** | **59.85** | **15.06** |

2.2 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 16501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.00 | 0.49 | 1.00 | 0.52 | 10.00 | 2.29 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழ் காணப்பட்ட இலக்கம் 7002/0000/00/0456/0016/000 கொண்ட கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 21.03 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | கணனிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | சேதங்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விவசாய இயந்திர உபகரணங்கள் வினியோகித்தல் மற்றும் முன்பள்ளி உபகரணங்கள் வினியோகித்தல் தொடர்பாக வழங்குனர்கள் மற்றும் நலன்பெறுவோரை தெரிவு செய்யப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் மற்றும் பெறுகைகள் குழு அறிக்கைகளின் மூலப் பிரதிகளைச் சான்றுகளாக சமர்ப்பிக்கப்படாமையினால் 03 கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கூட்டுத்தொகை ரூபா 17,129,600 தொகையினை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 3.3 எல்லைகளை கடைபிடிக்காமை

முற்பண விடய இலக்கம் 16501 தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 1,000,000 தொகை எனினும் மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான பெறுவனவு ரூபா 520,965 தொகை ஆகக் காணப்பட்டமையால் ரூபா 479,035 இனால் குறைந்த பெறுவனவு எல்லையை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 400,000 இற்கான மொத்த தேறிய நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன செலவு விடயம் ஒன்றிற்காக பெற்றிருந்த ரூபா 19,900,000 இற்கான குறைநிரப்பு நிதியேற்பாடுகளில் இருந்து ரூபா 12,669,797 தொகை மாத்திரம் பயன்படுத்தியிருந்ததுடன் அவை அந்த நிதியேற்பாடுகளில் 63.66 சதவீதமாகும்.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள தேசிய ஒற்றுமை மற்றும் அமைதிப் பணியகத்திற்காக உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பண்டக் கணிப்பீடு நடத்துதல்**

2016 மார்ச் 31 திகதிய இலக்கம் 05/2016 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படும் தேசிய ஒற்றுமை மற்றும் அமைதிப் பணியக வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 2017 செப்தெம்பர் 04 ஆம் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**3.7 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 139(1) | எல்பிட்டிய மற்றும் தெனுவர வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு வழங்கப் பட்டிருந்த ரூபா 316,600 இற்கான முற்பணங்களை தீர்க்கும் உறுதிச் சான்றுகளை சான்றுபடுத்தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2010 மே 14 திகதிய CA/1/17/1 கொண்ட ஜனாதிபதிச் செயலக த்தின் அரச செலவுகள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி | முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக ஊழியர்கள் அமைய/ ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கும் போது ஆட்சேர்ப்பு நடைமுறையின் குறைந்த தகைமையினை பூர்த்தி செய்திருக்க வேண்டியிருந்ததுடன் தகைமையை பூர்த்தி செய்திருக்காத இரண்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 834,694 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. |

### 3.8 செயலாற்றுகை

**போதியளவில் நிறைவேற்றப்படாத முக்கிய கருமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மழை நீரினை சேகரிக்கும் தொட்டிகளை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் 2016 ஆண்டின் போது முதல் கட்டமாக ரூபா 69,030,000 இற்கான மதிப்பீடு ஒன்றிற்காக 1000 நீர்த் தொட்டிகள் உற்பத்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் ரூபா 31,735,050 செலவிடப்பட்டு 421 நீர் தொட்டிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ii) வவுனியா மாவட்ட செயலகத்தை சேர்ந்த பிரதேச செயலக பிரிவுகளில் 40 குழாய் கிணறுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 3.48 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 680,000 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. ''செயலாளரின் கருத்துரையின் பிரகாரம் பெய்த கடும் மழை காரணமாக செயற்படுத்த முடியாதிருந்தது என'' கூறியிருந்தார்.

### 3.9 முகாமைத்துவ செயற்பாடுகள்

அமைச்சு அமைந்துள்ள கட்டிடத்தின் வாடகை தொடர்பாக அரச தலைமைப் பெறுமதி மதிப்பீட்டாளர் வினவியிருந்ததாகவும், கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை சட்ட மா அதிபரின் திணைக்களத்திற்கு அவதானிப்புக்கள் பெற்றுக்கொண்டதாகவும், சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 17,576 சது அடிகள் அடங்கிய 04 மாடிகளைக் கொண்ட கட்டிடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 1,610,000 தொகை செலுத்தியிருந்த போதிலும், அங்கு கடமையாற்றும் பதவியணியினர் எண்ணிக்கை 47 பேர் மாத்திரமே.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 09 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 24 | 12 | 12 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 13 | - |
| (v) | ஏனையவை | 03 | - | 03 |
| | **மொத்தம்** | **54** | **35** | **19** |

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் மற்றும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் அமைதிப் பணியகத்திற்காக வேலை சாட்டுதல் அடிப்படையில் 04 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.